எனவே, இந்தப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன் என்று முன்னரே சொல்லியிருந்தால், நான் அரசினுடைய கவனத்திற்கு அந்தப் பிரச்சினையைச் சொல்லி, உங்களுக்குப் பதில் பெற்றுத் தர முடியும். இன்றைக்கு இரண்டு பிரச்சினைகளை இரண்டு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அனுமதி பெற்றுப் பேசினார்கள். நாளை முதல் ஏதேனும் பிரச்சினையை எழுப்ப விரும்பினால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உங்களுக்கு பதில் பெற்றுத் தர முடியும்.

2. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1991-ஐ அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.